[illegible]

[illegible] 5 [illegible] 2 [illegible] 1937

JL
T15m211,N33
N37.5.2
190350

946 சந்தா ரூ. 1—0—0. AUGUST 1




"ஆரம்பக் கல்வி ஆபிஸ்"

1-95. புதுத்தெரு, மண்ணடி, மதராஸ்,

946
T15 211,N33
N37.5.2
190350

# Venkatrama & Co.

Printers, Publishers, Booksellers, Etc.

## வெங்கடராம நீதிகதா வாசகம்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் பாகம் | ...0—1—6 | நான்காம் பாகம் | ...0—1—6 |
| மூன்றும் பாகம் | ...0—1—6 | சித்ரபால சிக்ஷை | ...0—3—0 |

## வெங்கடராம தமிழ் வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | ...0 2 0 | நான்காம் வகுப்பு | ...0 4 0 |
| இரண்டாம் ,, | ...0 3 0 | ஐந்தாம் ,, | ...0 4 6 |
| மூன்றும் ,, | ...0 3 0 | | |

## POETICAL SELECTIONS

(Approved by the Text Book Committee).

| | | | | |
|---|---|---|---|---|
| FIRST BOOK | For I Form | 0—3—0 | THIRD BOOK III Form | 0—4—0 |
| SECOND ,, | II ,, | 0—3—0 | VENKATARAM'S 1st Primer | 0—2—0 |

நெ. 4. கார்பொரேஷன், பழக்கடை, சைனாபஜார், மதராஸ்.

# அகில இந்தியா

## ஆசிரியர்கள் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்

சென்னை.

ஆசிரியர்களால், ஆசிரியர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது.

உங்கள் வயோதிகத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நீங்கள் என்ன சேமித்து வைத்திருக்கிறீர்கள்?

உடனே ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் எழுதவும்.

தலைமை ஆபீஸ்:—

94/95, புதுத்தெரு, மண்ணடி, ஜி. டி., மதராஸ்.



வருடச் சந்தா ரூ. 1. மலர் 5. இதழ் 2. [ஆகஸ்ட் 1937.

# ஆரம்பக்கல்வி
## ELEMENTARY EDUCATION

"ஆரம்பக் கல்வி"யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாதாந்திரப் பத்திரிகை.

EDITOR.
P. VEERARAGHAVAN (Member, Madras District Educational Council)


"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

## காங்கிரஸ் சட்டசபையில் ஆரம்பக் கல்வி.

— 0 —

1937-38ம் ஆண்டு எய்டட் பாடசாலைகளுக்கு கிராண்டுகள் கொடுப்பதற்காக, சுமார் 61 லட்சம் ரூபாய்கள் ஜில்லா கல்விச் சபைகளுக்கு சட்டசபை கொடுக்க அனுமதித்தது. கடந்த வருடம் 59 லக்ஷங்கள் தான் கொடுக்கப்பட்டன. இவ் வருடம் 2 லக்ஷம் ரூபாய்கள் அதிகம். ஆனால் சென்ற வருடம் அரசாங்க அறிக்கையில் தெரிவித்தபடி ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு ரூபா 14ம் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 18ம், இவ் வருஷம் அரசாங்கத்தார் கொடுக்கவில்லை. ஆசிரியர்களுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்றால் அரசாங்கத்தாருக்கு பணமில்லாமல் போய்விடுகிறது. ஆனால் ஆரம்ப ஆசிரியர்கள் மட்டும் நன்றாக வேலைசெய்ய வேண்டு மென்று எல்லோரும் மேடைகளில் பேசுகின்றார்கள். வயிற்றுக்குச் சரியான ஆகாரமில்லா விட்டால் எவ்வாறு வேலை செய்ய முடியும்.

டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களை ஏற்படுத்தியதின் சம்பந்தமாக சில அங்கத்தினர்கள் ஆட்சேபணை செய்த பொழுது, கனம் கல்வி மந்திரியார், திறமையற்ற பாடசாலைகள் பல இருப்பதினாலும், அவைகளை சீர் திருத்துவதற்கு கல்வி அதிகாரிகள் அதிகம் வேண்டுமென்றும் வாதாடினார். அவ்விதமே ஆரம்பாசிரியர்கள் சார்பாகவும் வாதாடியிருந்தால் அவரை நாம் மிகவும் போற்றத்தக்கதாக இருக்கும். இனியாவது ஆரம்ப ஆசிரியர்கள்மீது கருணைகூர்ந்து கவர்ன்மெண்டார்வாக்களித்தபடி கூடியசீக்கிரம் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கும் ஸெகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் ரூபா 1-0-0 உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். லோயர் கிரேட் ஆசிரியர்களுக்கும் தற்போதுள்ள காங்கிரஸ் மந்திரிகள் இதர கிரேடினர்களுக்கு உயர்த்திக் கொடுத்த பிரகாரம் ரூபா 1 உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

### அட்வான்ஸ் கிராண்டு.

தற்போதுள்ள எய்டட் பாடசாலைகள், மிஷன் பாடசாலைகள் உட்பட அத்தனையும்

அரசாங்கத்தின் கிராண்டு உதவியை நாடியே நடைபெற்று வருகின்றன. சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெரிய பட்டணங்களில்தான் எய்டட் பாடசாலைகளில், சில பாடசாலைகள் நன்றாக சம்பளம் வசூலிக்கின்றன. கிராமப் பாடசாலைகள் அனைத்தும் சம்பளங்கள் வசூலிப்பது கிடையாது. இதைஉத்தேசித்துத்தான் அரசாங்கத்தார் ஒரு வருட கிராண்டை நான்காக பங்கிட்டு 3 மாதத்திற்கு ஒரு முறை கொடுக்குமாறு ஓர் உத்திரவை பிறப்பித்திருக்கின்றனர். அநேகமாக எல்லா ஜில்லாக்களிலும் 6 மாதத்திற்கு ஒரு முறை பாடசாலைகளுக்கு கிராண்டுகள் கொடுக்கப்பட்டுவந்தன. ஆனால் இந்த வருடம் அநேக பாடசாலைகளுக்கு அந்தவித கிராண்டுகள் கிடைக்கமாட்டாதென தெரிகிறது.

( Well Conducted Schools ) திறமையான பாடசாலைகளுக்கு மாத்திரம் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தார் ஓர் புதிய உத்திரவு செய்திருக்கின்றனர். அதாவது:—

திறமையான பாடசாலை என்பதென்ன?

1. 5வது வகுப்பு வரையில் இருக்க வேண்டும்.

2. முதலாவது வகுப்பிலுள்ள பிள்ளைகள் 100க்கு 25 பிள்ளைகள். 4வது 5வது வகுப்புக்களில் இருக்கவேண்டும்.

3. கல்வியதிகாரிகள் எக்காரணத்தைக் கொண்டும் அலௌஸ்ட்டு கிராண்டில் குறைத்திருக்கக் கூடாது.

இத்தகைய பாடசாலைகளுக்குத்தான் அட்வான்ஸ் கிராண்டு கொடுக்கப்படும். அட்வான்ஸ் கிராண்டு கொடுப்பதற்கு, இந்த உத்திரவை போட்டது அத்தனை சரியான முறையல்ல. சுமார் 42574 பாடசாலைகளில் 7159 பாடசாலைகள்தான் 5வது வகுப்பு வரையிலும், 27142 பாடசாலைகள் 4வது வகுப்பு வரையிலும், 6147 பாடசாலைகள் 3வது வகுப்பு வரையிலும், 1757 பாடசாலைகள் 2வது வகுப்பு வரையிலும், 369 பாடசாலைகள் முதலாவது வகுப்பு வரையிலும் உள்ளவை. மேற் குறித்த சட்டத்தின்படி முதல் 7159 பாடசாலைகளுக்கே அட்வான்ஸ் கிராண்டு கிடைக்கவழியுண்டு. மற்ற 35000 பாடசாலைகள் கதி என்னவென்பது நமது கேள்வி.

ஆதலால் இந்த புதிய உத்திரவு ரத்து செய்துவிட்டு பழைய உத்திரவுபடி 1937-38 வருடத்திய பரீட்சை செய்த ரிபோர்டுகள் வராத பாடசாலைகளுக்கு 36-37 வருடாந்திர பரீட்சை ரிப்போர்டை ஆதாரமாகக்கொண்டு நன்றாக நடைபெறும் பாடசாலைகளுக்கு ஜில்லா கல்விச் சபையினர் அட்வான்ஸ் கிராண்டு கொடுக்கும்படி அரசாங்க உத்திரவை திருத்தியமைக்கும்படி கேட்டு ஆசிரியர்களும், மானேஜர்களும் கூட்டங்கள் கூட்டி சட்டசபை அங்கத்தினர்கள் மூலமாக கிளர்ச்சி செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். இல்லையேல் நன்றாக வேலை செய்யும் அநேக பாடசாலைகள் மூடிவிட நேரிடுமென்பதில் ஐயமில்லை.

## புதிய கல்வி போர்டு.

செப்டம்பர் 28ம் தேதி.

கூடிய காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் கூட்டத்தில் தற்போதுள்ள கல்விச் சபைகள் முற்றிலும் மாற்றப்பட்டு, புதிய கல்வி போர்டுகள் ஜில்லாவாரியாக ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப் புதிய போர்டில் ஜில்லா கலெக்டர், கல்வியதிகாரி, இன்ஸ்பெக்டிரஸ், அந்தந்த ஜில்லாவிலுள்ள சட்டசபை அங்கத்தினர்கள், ஜில்லா போர்ட்டு தலைவர் முனிசிபல் சபைத் தலைவர்கள், (Exofficio.) அங்கத்தினர்களாக இருப்பர். பிறகு எய்டட் பாடசாலைகளை வைத்து பரிபாலனம் செய்யும் கதோலிக், பிராடஸ்டன்ட் ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்கங்களுக்கு2000அல்லது 3000 பிள்ளைகளுக்கு ஒரு ஸ்தானமாக, புதிய போர்டில் பிரதிநித்துவம் அளிக்கப்படும். செகண்டரி பாடசாலைத் தலைவர்களில் ஒருவரை ஏற்படுத்தப்படும். ஆசிரியர்கள் சங்கத்திலிருந்து ஒருவரை தேர்ந்தெடுக்கப்படும். இதன்

190350



முழு விபரம் ஆங்கிலத்தில் நமதுபத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இப் புதிய போர்டு எல்லோராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது, இதில் முக்கியமாக ஆரம்பாசிரியர்களுக்கும், உயர்தர பாடசாலை ஆசிரியர்களுக்கும் பிரதி நிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எய்டட் பாடசாலை மானேஜர்களுக்கும், ஜனநாயக ஆட்சி முறையில் 2000 அல்லது 3000 பிள்ளைகளுக்கு ஒரு ஸ்தானம் புதியபோர்ட்டில் அளிக்கப்பட்டிருக்கிறது.

இப் புதிய போர்ட்டுக்கு எல்லா வகையிலும் சர்வ அதிகாரமும் அளிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் அமுலுக்கு வருமானால் நமது இராஜதானியில் ஆரம்பக் கல்விக்கே ஒரு நல்ல காலம் என்று சொல்லலாம்.

## ஆசிரியர் அல்லாத எய்டட் பாடசாலை மானேஜர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

புதிதாக வரப்போகும் போர்டில் ஆசிரியர்கள் அல்லாத பாடசாலை மானேஜர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. தற்போது சென்னையிலும் மற்றொருஜில்லாவிலும், தான் இச்சங்கம் பிரதிநிதித்துவம் பெற்று வேலை செய்து வருகிறது. இத்தகைய சங்கம் ஒவ்வொரு ஜில்லாவிலிருக்க வேண்டியது மிக அவசியம். ஆதலின் உடனே தற் போதுள்ள ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தின் காரியதரிசிகளை இத்தகைய சங்கத்தை ஏற்படுத்தி கீழ்க்கண்ட விலாசத்திற்கு நிர்வாக அங்கத்தினர் பெயர்களுடன் சங்கக் குறிப்பையும் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

P. வீரராகவன்.
பொதுக் காரியதரிசி,
சென்னை மாகாண எய்டட் பாடசாலை,
மானேஜர்கள் சங்கம்.

94, 95. புதுத்தெருவு, மண்ணடி,
மதருஸ்.

## சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

பழைய சந்தா நேயர்களில் சிலர் பணம் அனுப்பிக்காமல் பத்திரிகை வரவில்லை என்று எழுதி வருகின்றார்கள். 1936ம் வருடம் செப்டம்பர் மாதத்திலிருந்து சந்தா செலுத்தி வருபவர்களுக்கெல்லாம் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். மற்றவர்களுக்கு பத்திரிகைகள் அனுப்பப்படமாட்டாது. ஆதலின் 5ம் வருடப் பத்திரிகை வேண்டுபவர்கள் உடனே புது வருட சந்தா என்று எழுதி ரூபா 1-0-0 மணி ஆர்டர் செயயவும்,

மானேஜர்.

## ஏழைப் பெண்களுக்கு சம்பள நஷ்ட ஈடு.

எய்டட் பாடசாலைகளில் வாசிக்கும் ஏழைப் பெண்களுக்கு கவர்ன்மெண்டார் நஷ்டஈடுபிரதிவருடம் கொடுத்துவருகின்றனர் அநேக பாடசாலைகளுக்கு இந்த விஷயம் தெரிகிறதாக காணப்படவில்லை. ஆதலின் ஏழைப் பெண்கள் இனமாக படிக்கும் பாடசாலை மானேஜர்கள் ரேஞ்சு டெப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு தெரிவித்து சம்பளநஷ்டஈடு பெற்றுக்கொள்ளலாம்.

## பொதுச் செய்தி.

மலையாளம் ஜில்லா கல்விச் சபைக்கு, தலைவரை தேர்ந்தெடுக்கும் உரிமையை, கல்வி மந்திரியார் கொடுத்திருக்கிறார். இந்த உரிமை 1935ம் வருடம் எடுக்கப்பட்டு அரசாங்கத்தாரே ஒரு தலைவரை ஏற்படுத்தினர்.

* * *

ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து விடுவதினால் மாத்திரம் பயன் கிடைக்காது. நமது நாட்டின் தற்கால நிலையில், ஆசிரியர்களிடத்தில் புதிய எண்ணங்களும், மாறுதல்களும், காணப்படவேண்டும். கூடுமானால் ஆசிரியர்கள் ஒரு புதிய புரட்சியையுங்கூட உண்டாக்க தயாராக வேண்டும். ஆனால் தற்போதிய ஆசிரியர்கள் அவ்வளவு தைரியமுள்ளவர்களாக காணப்படுவதில்லை.

புதிய தத்துவமுறையில் கல்வி சீர் திருத்தப்படவேண்டும்.

Mr. T. R. Danial.
President Teachers guild Tirupathi.

* * *

எல்லா ஆசிரியர்களையும் கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களாக அரசாங்கத்தார் பாவிக்க வேண்டும், ஆசிரியர்களுக்கு எல்லாவகையிலும் பல சௌகரியங்களைச் செய்துதரவேண்டும்.

Teachers guild Kumbakonam.

இவ் வருஷம் Building grant. பாடசாலை கட்டடங்களை கட்டுவதற்கு ஜில்லா கல்விச்சாலைகள் உத்திரவு கொடுக்கக்கூடாதென்றும் அனுவசியமாக பொது மக்களின் பணத்தை கொண்டு பாடசாலைக்கு கட்டடம் கட்டுவதில் பிரயோஜனமில்லை யென்றும், கூடுமானவரையில் நல்ல குடிசைகளிலும், கோயில் மண்டபங்களிலும், பாடசாலைகள் நடை பெறுவதில் யாதொரு ஆட்சேபனைகள் இல்லையென அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

## ஆரோக்ய வாழ்வு

ஒருவன் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமானால் கீழ்க்கண்ட விதிகளைச் சரியாக அனுஷ்டிக்க வேண்டும்.

1. உடம்பை எப்பொழுதும் சட்டையைப் போட்டு மூடாதே. இந்த வழக்கம் வியாதிகளுக்கு மாலையிடுவதாகும்.

2. தினந்தோறும் சரியாக மலங்கழிகிறதா என்பதைக் கவனி.

3. நீ படுக்கப் போகும்பொழுது உன்னுடைய கவலைகளை அழைத்துச் செல்லாதே.

4. அகத்தில் மகிழ்ச்சி தேகத்திற்கு ஆரோக்கியம்.

5 சாப்பாட்டை ஒழுங்கு படுத்திக் காலந் தவறாமல் சாப்பிடு. கண்ட வேளைகளில் சாப்பிடக்கூடாது.

6. காய் கறிகள், கீரைகள், பழ வகைகள் இவற்றை ஏராளமாக சாப்பிடு.

7. எலுமிச்சம் பழத்தைத் தவறாமல் உபயோகிப்பது ஆரோக்கியத்திற்கான வழி.

8. அதி காலையிலேயே படுக்கையை விட்டெழுந்திரு. இரவில் சீக்கிரமாக படுக்கைக்குப் போய்விடு.

9 கள்ளு, சாராயம் இவை எல்லாம் விஷம். இவை தேகத்தையே அழிக்கின்றன. ஆகையால் இவற்றின் வாசனையையும் பிடியாதே.

தென்னிந்தியாவிலுள்ளவர்கள் மூன்று வேளையும் இடை வேளையில் சிற்றுண்டியும் உண்கிறார்கள். ஆனால் ஒருவன் வேலை செய்ய வேண்டுமானால் அவன் இரண்டு வேளை போஜனத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். தேக உறுப்புக்களை ஈடுபடுத்த வேலை செய்பவர்கள் மூன்று வேளை உண்ணலாம். ஆனால் படிக்கும் மாணவர்கள் இரண்டு வேளையே உண்ணல் வேண்டும். இடையே எதுவும் சாப்பிடக் கூடாது.

சாப்பிடும் வகை.

நிதானமாகவும், நன்றாக மென்றுமே சாப்பிட வேண்டும். மாணவர்கள் பள்ளிக்கு மணி ஆகி விடுகிறதென்று ஐந்தே நிமிஷத்திற்குள்

[23-ம் பக்கம் பார்க்க.]



## CONGRESS EDUCATION SUB-COMMITTEE

### NEW DISTRICT EDUCATION BOARDS.

Madras, Sep. 28.

A meeting of the sub-Committee No. 1, appointed on September I7 at the joint meeting of the Legislature Congress party Committees on Elementary Education and Secondary Education, was held on Monday in the room of the Parliamentary Secretary to the Minister for Education, with Mr. C. J. Varkey, Convenor, in the chair.

The Sub-Committee came to the following conclusions:

The Government must take over the Schools (Elementary and Secondary) which are now managed by District Boards, Panchayat Boards and Municipalities.

The District Educational Councils and District Secondary Education Boards should be abolished, and in their place Education Boards be appointed in each District and revenue firka to co-operate with the Government in the matter of spreading education and managing and supervising schools. In each district a District Education Board must be instituted consisting of the following members: (a) Ex-officio: The Collector of the District, District Educational Officer Inspectress of Schools, President of the District Board, Chairman of the municipalities in the district and members of the Legislature resident in the District.

[b] Elected: Representatives of Educational agencies, such as Registerted Educational Societies, Mission Bodies, Recognised District Teacher-managers' Associations, representations being in proportion to the number of pupils under intruction in the schools managed by the respective agencies or organisations (Say, one member for 2,000 or 3,000 pupils); one representative of District teachers' guild or Association; one headmaster, elected by the headmasters of Secondary Sohools, from among them selves.

[c] Co-opted : One lady to be co-opted by the Board if there be no lady member of the Legislature from the District.

The powers of the District Educational Boards will be:—

(a) those provided by the Madras Elementary Education Act, except the power of disbursing grants.

(b) The new powers of the Board which the D. E. C. had not, will be :

Appellate powers in disputes between Government or Inspectorate and Managers, between managers themsleves and between managers and teachers. Advisory powers in the matter of selection, promotion, transfer and punishment of teachers : selection of text-books. Help the Government in the work of supervising schools. Sanctioning grants. [teaching grants and capitation grants] to private schools sanctioning expenditure for schools which will be taken over by the Government from Local Boards and Municipalities, and recommending toGovernment from time to time, improvements to be effected in schools under Government managements.

In each revenue firka there shall be a "Local Education Board" also and the powers of Local Education Board shall be mainly advisory.

The members will be the Tahsildar or Deputy Tahsildar of the area, Deputy Insepctor of Schools, Sub-Assistant Inspectress, presidents of the Panchayat Boards in the area, one lady preferably from the firka, to be co-opted by the Board, Head masters of Secondary Schools in the area

19035

The Board submit schemes to the District Education Board for expansion of elementary education in the area, for starting and recognition of new schools, for amalgamating existing schools, transfer of schools from one area to another.

The Board shall also help the Department in the matter of local supervision of schools.

No travelling allowances shall be paid to non-official members of the District and Local Education Boards.

MADRAS, Oct. 1,

A meeting of the Sub-Committee No. 11 (on Aims and Scope of Elementary and Secondary Education) of the Congress Legislature Party Committee on Education was held yesterday in the room of the Parliamentary Secretary to the Minister for Education, with Mr. C. J. Varkey, Convenor, in the chair.

The committee discussed various aspects of elementary and secondary education and came to the following conclusions:—

The whole course of education in the elementary ond secondary stages should be nationalised, and for this purpose the following measures may pe urged (a) the adoption of Vernacular as the medium of instruction, first languaage, and Hindi and English (with equal emphasis) as com-pulsory second languages in the 1, 11 and 111 Forms, and English as compulsory second language with Hindi as optioual in IV, V and VI Forms; (c) the introduction of Indian games, (d) singing of national songs at the commencement and closing of schools, and (e) adoption of text-books detailing the life and work of Indian patriots, and other subjects of national importance,

The Committee decided to urge for free and compulsory education at an early date.it agreed with the view of the G. O. No. 1378 that only children of the lowest-age group should attend school and continue in school until they pass out of the school-age limits or reach the V Standard. Compulison on the same basis in successive years should be applied till all children of the right age groups are reading in the five standards of elementary schools.

In the elementary stage, the course should consist of five years. The first three standards should have a uni-form curriculum for boys and girls, the classes being held both in morning and afternoon In the IV and V standards, the 'shift' system should be introduced, the pupils attending the morning classes being allowed to remain at home if parents desired, or with them in their fields or work-shops. Girls are to have separate classes on subjects specially suitable to them.

In the matter of secondary education the Committee agreed with the plan of 'bifurcation' suggested in the G. O. There were differences of opinion on the question of a public examination at the end of IV-Form and the extension of the secondary education by one year by incorpora ting into the socondary course the Junior Indermediate Class of the College Course However, the Committee agreed with the general plan in the G. O.

MONTHLY RETURN FORMS.

புதிய ஆரம்பக்கல்விச் சட்டத்திருத்தத்தின் 5-வது பிரிவின்படி பிரதி மாதமும் ஒவ்வொரு பாடசாலையும் மாதாந்திர ரிபோர்ட்டு 15-ந் தேதிக்குள் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு யனுப்ப சிரமம் இல்லாமல், (Mouthly reaturn Forms) அச்சிடப்பட்டிருக்கின்றன. 4 அணதபால் பில்லைகளை [Postal Stam] காலணு பில்லைகளாக அனுப்பினுல் 24 பாரங்களும் உடனே தபாலில் அனுப்பிக்கப்படும்.

மானேஜர்
"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"
94-95, புதுத்தெரு மண்ணடி, மதராஸ்.



அத்தனையும் வாரி அடித்துக்கொண்டு எழுந்து அவசர அவசரமாகப் பள்ளியை நோக்கி குடு குடுவென்று ஓடி விடுகிருர்கள். இதைப்போல் உடலுக்கு கேடுண்டாக்கக் கூடியது வேறெதுவுமில்லை ஆகையால் எவ்வளவு அவகாசமிருக்கிறதோ அதற்குள் உணவு கொஞ்சமாகவிருந்தாலும் அதை நன்ருகமென்று புசிக்க வேண்டும். இதுவே சரியான விதி. ஆகாரத்தை உமிழ் நீருடன் நன்ருகக் கலந்து வயிற்றினுள் தள்ளினுலல்லாது அவை ஜீரணமாகாது.

தண்ணீர் அருந்தல்,

அதிகமான பேர்வழிகள் ஒரு பிடி சாதமும் ஒரு வாய் தண்ணீரும் உட்கொள்வர். இதுபோல் சாப்பிடும் பொழுது இடை யிடையே தண்ணீர் உட்கொள்வது முற்றிலும் ஆரோக்கியத்திற்குக் கெடுதி. சாப்பிடுவதற்கு குறைந்தது அரை மணி நேரத்திற்குப் பிறகு தண்ணீர் சாப்பிட வேண்டும். ஒரு மணி நேரத்திற்கு முன்னும் பின்னும் சாப்பிடுவது மிக!நல்லது. சாப்பாட்டின் நடுவே தண்ணீர் சாப்பிடுவதால் ஜீரண சக்தி பெரிதும் பாதகமடையும். உடலுக்கும் கேடு உண்டாகும் இதைச் சரியானபடி மாணவர்கள் கவனித்து நடக்க வேண்டும்.

குளிர்ந்த ஜலமே நல்லது

குளிக்கவோ அல்லது தாகத்திற்கு அருந்தவோ குளிர்ந்த ஜலந்தான் நல்லது. குளிர்ந்த ஜலம் உடம்பில்பட்டதுமே மின்சாரம் போன்ற ஓர் புதிய சக்தி தேகம் முழுவதும் பரவுகின்றது. இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. குளிர்ந்த ஜலம் மூளையை விசாலப்படுத்துகிறது. நரம்புகள் வலுவடைகின்றன. இரத்த ஓட்டத்தின் வேகத்தைத் துரிதப்படுத்துகிறது. ஆகையால் மாணவர்களுக்கு குளிர்ந்த ஜலம் முக்கியமென்பதை அறிவாராக.

M. A. கிருஷ்ண சுவாமி.

தர்மபோதினி.
—0—

1. இவ்வுலகத்தில் தாய் தந்தையர்கள், மனிதனுக்குச் சுவாதீனமானவரும் நல்ல வருமான தெய்வங்கள்; அப்பேர்பட்டவரை முதல் முதலாய் கௌரவம் செய்து சந்தோஷப்படுத்திப் பிறகு நாம் பகவானை சேவிக்க வேண்டும்.

2. இவ் வுலகத்தில் தன்னைக் காப்பாற்றும் தாய் தந்தையர்களை விட்டு விட்டு எவன் வாசம் செய்கிருனே அவன் நீசஜாதி, நீசன் மஹாபாபி, மேலும் நிஜமாய் நன்றியறிவில்லாதவன்.

3. தக்கபடி சிக்ஷிக்கிறதனுல் வெகு நல்ல குணங்கள் உண்டாகும்; ஆதலால் நாம் மாணுக்கர்களை சிக்ஷிக்க வேண்டும். அவர்கள் ஆசாரியர்களைச் சேவிக்க வேண்டும்; அதனுல் சௌக்கியம் உண்டாகும்.

4. நல்ல ஜலத்தினுலும், நல்ல ஆகாரத்தினுலும் நாம் எப்பொழுதும் நம்முடைய தேகத்தைப் போஷிக்க வேண்டும்; நம்முடைய சரீரம் ஞானத்துக்குச் சாதகமாக யிருப்பதால் அதை நாம் ஒடுக்கக்கூடாது.

5. மனிதர்களுக்கு எவ்வளவு திரவியம் இருந்தபோதிலும் சரீர சௌக்கியமில்லாவிட்டால் அதனுல் என்ன பிரயோஜனம்? ஆரோக்கியமிருந்தால் சகலவிதமான சுகங்களையும் மனிதன் அடையலாம்.

M. A. நித்யாநந்தம்.
தலைமை உபாத்தியாயர்,
இராமலிங்கஸ் சுவாமி.
பாடசாலை.

19035

## என். முருகேச முதலியார் அண்ட் ஸன்

டிராயிங், கிராப், நோட்புக், அகௌண்ட் புத்தகம் தயாரிப்பவர்கள்
54-55 பத்ரையன் தெரு ஜி. டி. மதருஸ்.

பாடசாலைக்கு வேண்டிய, கீழ் குறிப்பிட்டபடி 40, 60, 80, 120, பக்கங்கள் கொண்ட, எக்ஸைஸ் நோட் புத்தகங்கள், குரேஸ் கணக்கிலும் Students note books (Nos 1, 2, 3, 4, 5 டஜன் கணக்கிலும் விற்கப்படும்.
விலை ஜாபிதா விலாசம் தெரிவிப்பவர்களுக்கு அனுப்பப்படும்.

6 பவுன் மட்ட பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
6 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
8 பவுன் கல்கத்தா பேப்வர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
ரூல் போடாதது ....
ரூலும் மார்ஜினும் ....
ஒரு பக்கம் ரூல் ....
ரூலும் கலர் அட்டையும் ....
ஒரு பக்கம் ரூலும் கலர் அட்டையும்
9 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது
ரூலும் மார்ஜினும் ....
10 பவுன் கல்கத்தா பேப்பர்
ரூல் போட்டது & இரட்டை ரூல்
ரூலும் மார்ஜினும் ....
ஒரு பக்கம் ரூல்ட் ....
ரூலும் கலிகோ அட்டையும் ....
ஒரு பக்கம் ரூலும் மார்ஜினும் கலிகோ அட்டையும்

STUDENTS' NOTE BOOKS.

8. Pounds Ruled & Mathematics
,, Unruled Margin
,, Unruled
,, One Side Ruled
,, One Side Ruled

10. Pounds Ruled & Mathematics
,, Unruled
,, One Side Ruled
,, Ruled & Margin

## ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினால் தேக சுகத்தைக் கெடுத்துக்கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனாக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையேல் உபயோகித்து உடனே தேக அசதி, மலச்சிக்கல் நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபக குறைவு, தாது புஷ்டியின்மைமுதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0

இனாம்! காம சாஸ்திரம் இனாம்!!
விலாசத்தை தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலையம்,
26, பீரிட்வே, : : : : மதராஸ்

## நவ யௌவனம் வேண்டின்

உலகப்பிரசித்திப் பெற்ற தேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

## மதனமஞ்சரியை

### உபயோகியுங்கள்.

இம்மாத்திரைகள் அஜீரணம்; மலச்சிக்கல ஞாபகக் குறைவு; நரம்புத் தளர்ச்சி இவைகளை நாசமாக்கி தேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து இல்லறவாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும்.

இனாம் கேட்லாக் இனாம்!
ஒரு டப்பி விலை ரூ. 1—0—0
மதன மஞ்சரி பார்மஸி
94. சைனாபஜார் ரோட்,
மதராஸ்.





40 மாத்திரைகள் அடங்கிய





ஒரு டப்பி விலை ரூ. 1

ஒருமணி நேரத்தில் வாலிபம்
### ரமணா விலாசினி.

இரவில் ஒரு மாத்திரை படுக்கைக்குச் செல்லும் ஒரு மணி நேரத்துக்கு முன் சாப்பிடுவதால் இஷ்டப்படி வீரிய ஸ்தாபனம் உண்டாகின்றது.

ஒன்று முதல் 5-வது வகுப்புக்களுக்குப் பாட புத்தகங்களாக வைக்கத் தகுந்தவை

## மணி வாசகம்

நூதன முறையில் ஆரம்ப பாடசாலைகளைப் பார்வையிடும் அநுபவ மிகுந்த ஆசிரியர்களால் தயாரிக்கப் பெற்றவை. பல சித்திரப் படங்கள் கொண்டவை படங்களின் அளவும் தன்மையும் கடையின் நேர்மையும் தெளிவும் இவ்வாசக வரிசையின் பெயருக்கு ஏற்றவாறே அமைந்துள்ளன.

| | அ. | பை. |
|---|---|---|
| முதல் புத்தகம் | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| மூன்றாம் ,, | 4 | 0 |
| நான்காம் ,, | 5 | 0 |
| ஐந்தாம் ,, | 6 | 0 |

## பாலர் கணிதம்

முத்தியாலுபேட்டை
உயர்தரகலாசாலை பிரதம ஆசிரியர்
கெ. எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார் B. A., L. T.,
இயற்றியது.

முதல் புத்தகம் 3-வது வகுப்புக்குரியது. 6 அணா
இரண்டாம் புத்தகம் 5-வது வகுப்புக் குரியது 7 அணா
மூன்றாம் புத்தகம் 4-வது வகுப்புக்குரியது. 8 அணா
(இப்புத்தகங்களுக்குத் தெளிவுரை பிரதிகளுண்டு)

இவை அரசாங்க அங்கீகாரம் பெற்றவை.

### ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
53-56, பழக்காரத் தெரு; சென்னை

Registered. No. M. 3671

# "ARAMBA BOTHINI"

PUBLISHED FROM JANUARY 1938.

A High Class Tamil Monthly

## Good and Healthy Reading

FOR SCHOOL CHILDREN AND RURAL READERS
EDUCATIONAL, INSTRUCTIVE, ENTERTAINING CHARACTER BUILDING

## TEACHERS & PARENTS

SHOULD ENCOURAGE READING THIS VERY USEFUL AND HEALTHY MONTHLY.

FREE FROM IMMORAL STORIES & ADVERTISEMENTS AND CINEMA PICTURES

**ANNUAL SUBSCRITION 9 As 2 COPIES Re. 1.**

*ARAMBA BOTHINI OFFICE, DASARPURAM, TINNANUR R.S.*

---

# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்.

1. 'தக்வா' — கக்வானுக்கு மிகவும் கைக்கண்டது; ரிஜிஸ்டர்செய்யப்பட்டது. இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப் பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். .... புட்டி ரு 1.
3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனாம்.

2. க்லோரோ சாலினால் — இதுவே ஹரிதாசர் காலரா ஆளி மருந்து; தவறினதே கிடையாது, அபூர்வமான, மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா, பேதி, வயிற்றுநோய் இவைகள் விரைவில் நீங்கும். புட்டி ரூபா 1 2 0

3. ஏனாந் தைலம். — ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகலவிதமான கண் நோய்களும நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும் ராஜ உருப்புக்களிலுள்ள மேகச்சூடு நீங்கும். புட்டி விலை ரூபா 1 4 0



மருந்து காட்லாக் இனாம்.

வாத்தியார்களுக்கும் வைத்தியர்களுக்குமாத்திரம் ரூ. 5 மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ. 1 தள்ளி கொடுக்கப்படும்

ஆஸ்த்மா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு

கைகண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

**Dr. H.** தேவதாசர் B.A., L.T., M.T.Sc.,
தாசர் சித்த வைத்திய சாலை,
தின்னனூர் R. S.